4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 203/2019 நாள்: 14.06.2024 வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சசிக்குமார் | தொழில் | : |
| த/பெ | : மனோகரன் | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| | : | மாவட்டம் | : |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

2006 லிருந்து மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் தனியாக ஐஸ்வர்யா என்ற மருத்துவமனை நடத்தி வந்தேன். நான் முதன் முதலாக பாண்டிச்சேரியில் முதுநிலை மருத்துவ படிப்பு படித்தேன். 2011ம் வருடத்திலிருந்து சொந்தமாக மருத்துவமனை நடத்தி வந்தேன். முதுநிலை மருத்துவ படிப்பு படிக்கும்போதே 2006ம் வருடத்திலிருந்து பாண்டிச்சேரியில் 2 வருடமாக கிளினிக் நடத்தி வந்தேன். 2011 ஆம் வருடத்திலிருந்து உடுமலைப்பேட்டையில் ஐஸ்வர்யா மருத்துவமனை நடத்தி வந்தேன். 2020 ஆம் ஆண்டு வரை உடுமலைப்பேட்டையில் தனியாக மருத்துவமனை நடத்தி வந்தேன். தற்போது திண்டுக்கல், வடமதுரையில் MS மருத்துவமனை என்ற பெயரில் தனியாக மருத்துவமனை நடத்தி வருகிறேன். நான் வருமானவரி செலுத்திவருகிறேன். 03.02.2019 அன்று நான், பிரதிவாதிக்கு கடன் கொடுத்தேன். 2016 ஆம் ஆண்டில் பணமதிப்பிழப்பு நடவடிக்கை அரசால் செய்யப்பட்டது. நான் வருமானவரி செலுத்திவருவதால் வருமானவரி சட்டத்தின்படி ரூ.10,000/-க்கு மேல் வரவு செலவு செய்வதாக இருந்தால் காசோலை மூலமாக செலுத்த வேண்டும் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. ரூ.2 லட்சத்துக்குமேல் பண பரிமாற்றம் செய்ய வேண்டும் என்றால் அது குறித்து வருமானவரி துறைக்கு தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். இந்த தாவா கடன் குறித்து வருமானவரித்துறைக்கு தெரிவித்துள்ளேன். தாவா கடன் குறித்து வருமானவரித்துறை அனுமதியளித்ததா என்றால் நான் கொடுத்த கடனை வருமானவரியில் காண்பித்துள்ளேன். 2018-2019 ஆம் ஆண்டிக்குரிய வருமாவரி கணக்கை தாக்கல் செய்ய சம்மதிக்கிறேன். பிரதிவாதியை, எனக்கு எப்படி தெரியும்

என்றால் எனது மருத்துவமனைக்கு அருகில் விவசாய சம்மந்தமாக கடை வைத்துள்ளார். பிரதிவாதிக்கு என்ன சொத்துக்கள் உள்ளது என்றால் அவரது கடைக்கு பின்புறம் ஒரு இடம் உள்ளது. உடுமலைப்பேட்டை ஒட்டியுள்ள கிராமத்தில் சில இடம் இருப்பதாக பிரதிவாதி என்னிடம் தெரிவித்தார். பிரதிவாதியின் சொத்துக்கள் குறித்து குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிக்கு இருப்பதாக சொல்லப்படும் சில இடங்களுக்கு உண்டான பத்திரங்களை நான் பார்த்துள்ளேன். அந்த பத்திரங்கள் என்னிடம் கைவசம் இல்லை. எனது வழக்கறிஞரின் கைவசம் அந்த பத்திரங்களின் சான்றிட்ட நகல்கள் மற்றும் ஜெராக்ஸ் நகல்களும் உள்ளது. அந்த பத்திரங்களின் நகல்கள் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் நான் பிரதிவாதிக்கு எதிராக திருப்பூரில் தாக்கல் செய்துள்ள வழக்கில் பிரதிவாதி ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறார். நீதிமன்றத்தில் இருந்து அந்த ஆவண நகல்களை பெற்றேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படியும் சாட்சியின் ஒப்புதலின்படியும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஒம்/–திரு.V.ஜான் மினோ,
4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.